

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

**மறைத்திரு திருத்தொண்டர் சந்தனசாமி பீட்டர்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து : துறவறத்தாரின் பணி: அர்ப்பணிக்கப்பட்ட துறவற ஆண்களும், பெண்களும் தங்களுக்குள் ஊக்கம் பெறவும் ஏழைகள், ஒதுக்கப்பட்டோர், குரலெழுப்ப முடியாதோரிடையே பிரசன்னமாய் இருக்க வேண்டுமென்று**

**அக்டோபர் மாத கரு : நான் எல்லைகளைத் தாண்டி கிறிஸ்துவில் பயணிக்கிறேன்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| செப் 30 ஞா | காலை 7.00<br>காலை 9.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 26ஆம் ஞாயிறு- செபமாலை மாத தொடக்கம்<br>பொதுக்காலம் 26ஆம் ஞாயிறு- செபமாலை மாத தொடக்கம் |
| அக் 1 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | குழந்தை இயேசுவின் புனித தெரேசா |
| அக் 2 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | தூய காவல் தூதர்கள் |
| அக் 4 வியா | காலை 6.30<br>மாலை 8.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, த) | புனித பிரான்சிஸ் அசிசி<br>புனித பிரான்சிஸ் அசிசி சிற்றாலயம், தாசேக் |
| அக் 5 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| அக் 6 சனி | காலை 6.30<br>மாலை 4.30 | திருப்பலி (ஆ)<br>திருமணம் (த) | புனித புரூனோ<br>தோணி பிரகாஷ் த/பெ ஜோசப் & ரெஜினா தமிழ்செல்வி த/பெ சத்தி |
| அக் 7 ஞா | காலை 7.00<br>காலை 9.00<br>மாலை 5.30 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ, ம)<br>நவநாள்/ திருப்பலி (த) | பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு<br>பொதுக்காலம் 27ஆம் ஞாயிறு- குடியேற்றவாசிகள் ஞாயிறு<br>புனித செபஸ்தியார் சிற்றாலயம், முனிசிபல் |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| செப் 30 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த) |
| அக் 1 திங் | மாலை 7.45-9.15<br>மாலை 8.00 | பெர். மை 2-1&2-2<br>பெர். மை 1-3 | RCIA<br>மரியாளின் முன்னணி படை கூட்டம் |
| அக் 2 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| அக் 4 வியா | மாலை 7.00<br>மாலை 7.45-9.15 | ஆலயம்<br>பெர். மை 2-1&2-2 | முன்னோன் & வாசகர் பயிற்சி<br>RCIA |
| அக் 6 சனி | காலை 9.00<br>மாலை 5.30 | பெர். மையம்<br>ஆலயம் | ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2<br>செபமாலை/ சகாயமாதா நவநாள் |
| அக் 7 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 12.00 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>புனித சிசிலியா ஜூனியர் பாடல்குழு (த) |

**2018 அக்டோபர் மாத திருமணங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| அக் 20 | காலை | 11.30 | திருமணம் (ஆ) | ரூபன் த/பெ கருப்பையா & வெரோணிக்கா கேரலின் த/பெ டேவிட் |
| அக் 27 | காலை | 11.30 | திருமணம் (த) | டேவிட் த/பெ வேளாங்கண்ணி & மரின்தான் மெக்டலீனா சினகா |
| அக் 27 | மாலை | 2.00 | திருமணம் (த) | யுவராஜ் த/பெ K. ராமசாமி & நான்சி பிரியா த/பெ ஸ்டீவன் இம்பராஜூ |
| அக் 27 | மாலை | 4.30 | சடங்கு (த) | விஸ்வா ராக்ஸ் த/பெ முனுசாமி & விக்டோரியா த/பெ அந்தோணி |

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. மெழுகுவர்த்திகள் விற்பனை:** மெழுகுவர்த்திகள் விற்பனைக்கு உள்ளது. ஒரு மெழுகுவர்த்தி விலை ரிம 20/-. 30/9/18 ஞாயிறு திருப்பலிக்கு பிறகு வாங்கிக்கொள்ளலாம். விற்கப்பட்ட பணம் அனைத்தும் கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மேற்கு திசை அதிச தலைவர்கள் தங்களின் அதிச உறுப்பினர்களுக்காக எடுத்துக்கொண்டனர். மற்ற திசைக்களுக்காக குறைந்த மெழுகுவர்த்திகள் மட்டுமே உள்ளன.

**2. செபமாலை மாதமான அக்டோபர் மாதம்:** இந்த அக்டோபர் மாதத்தில் தங்களுக்குரிய அதிசாவில் செபமாலை செய்வோம். 30 செப் 2018 ஞாயிறு காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளின்போது அதற்கான செபம் மற்றும் மெழுகுவர்த்தி ஆசீர்வதிக்கப்படும். தயவு செய்து உங்களது அதிசாவிற்குரிய மெழுகுவர்த்தியை உங்கள் அதிச பெயர் அட்டையுடன் மெழுகுவர்த்தி ஆசீர்வதித்தலுக்காக கொண்டு வரவும்.

**3. விவிலிய பகுத்தறிவு வகுப்பு (BK-SPM) :** யார் கலந்து கொள்ளலாம்? அ) 2019/2020 இல் **SPM** தேர்வில் அமரவிருக்கும் படிவம் 3 & படிவம் 4 மாணவர்கள் ஆ) தங்களது விவிலிய அறிவை விசாலப்படுத்தவும், தங்களது ஆங்கில அறிவை மேம்படுத்தவும் விரும்பும் மாணவர்களும், மற்றவர்களும். ஆர்வமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் பதியவும். வகுப்புகள் பெர்.மை 2-2 ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.00 ~ 4.00 வரை நடைபெறும. பெற்றோர்களே, தயவு செய்து உங்கள் குழந்தைகளை கலந்துகொள்ள ஊக்கமளியுங்கள்

**4. புலூமா மகளிர் கூட்டம் :** 7 அக் 2018 ஞாயிறு காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு தாவரங்கள், உடைகள், நகைகள் மற்றும் வகைப்படுத்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை புலூமா மகளிர் குழு விற்பனை செய்யவுள்ளது. நமது பங்கு மக்கள் அனைவரையும் வரவேற்கிறது. கிடைக்க கூடிய பணம் அனைத்தும் புலூமா குழுவால் நடத்தப்படும் 11 மார்ச் 2019 அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டத்திற்கு சேரும்.

**5. அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய நிலவரம்:** ஈப்போ நகராண்மைக் கழகத்திடமிருந்து சிற்றாலயம் கட்டுவதற்கான அனுமதியை நாம் பெற்றுவிட்டோம். கட்டிட வரைபட திட்டத்தை நகராண்மைக் கழக அங்கீகாரத்திற்கு நாம் சமர்ப்பிப்போம். நமது இடம், சிற்றாலயம் கட்டுவதற்கு அரசாங்க உரிமை குடியிருப்பு அரசிதழ் (கெசட்டெட்) பதிவுப் பெற்றுள்ளது. 14/9/2018 வெள்ளியன்று நாம் இந்ந பத்திரத்தை பெற்றுக் கொண்டோம்.

**6. அனைத்து UPSR மாணவர்களுக்கு: UPSR** மாணவர்களுக்கு பொதுத்தேர்வு நடைபெற இருப்பதால் செப்டம்பர் மாதம் மட்டும் மறைக்கல்வி வகுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது. மீண்டும் மறைக்கல்வி வகுப்புகள் அக்டோபர் மாதத்திலிருந்து வழக்கம்போல் நடைபெறும்.

**7. நன்றி தந்தை சைமன் ஆனந்த்:** தந். சைமன் ஆனந்த் 1 அக் 2018லிருந்து கம்பார், திரு இருதய ஆண்டவர் ஆலயத்திற்கு பங்கு குருவானவராக செல்கிறார். அவர் 2015லிருந்து பங்கில் பணியாற்றி வருகிறார். இந்த லூர்து மாதா பங்கில் மக்களின் நலனுக்காக செய்த அவரின் அனைத்து அர்ப்பணிப்பிற்கும் பங்கின் சார்பாக நான் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இவரின் பிரியாவிடை திருப்பலி 30 செப் 2018 (ஞாயிறு) நடைபெற இருக்கிறது. அவர் இரண்டு திருப்பலிகளையும் நிறைவேற்றுவார் (காலை 7.00 & 9.00). வாருங்கள், இணைந்து அவரின் புதிய நியமனத்திற்காக மன்றாடுவோம்.

**8. பங்கு மேய்ப்புப்பணி மாநாடு 2018:** நாள்: 28 அக் 2018 (ஞாயிறு) நேரம்: மதியம் 12.00 ~ மாலை 5.00 இடம்: பெர். மையம். பமேப குழுவால் நியமிக்கப்பட்ட அனைத்து அதிச மற்றும் பணிக்குழுக்கள் மற்றும் அனைத்து தலைவர்களும், துணைத் தலைவர்களும் இந்த பங்கு மாநாட்டிற்கு அழைக்கப்படுகிறீர்கள்.

**9. பங்கு திட்டமிடுதல் 2019:** அடுத்த வருடத்திற்கான நமது பங்கு கருத்து: **சகோதரத்துவம்.** அனைத்து பங்கு பணிக்குழுக்கள் & அதிச தயவு செய்து பங்கு கருத்தையொட்டியதாக உங்களது நிகழ்வையும், செயல்பாடுகளையும் திட்டமிடுங்கள். பதிவு பாரங்களை பங்கு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். 'உன் செயல்களை ஆண்டவரிடம் ஒப்படை; அவற்றை வெற்றியுடன் நிறைவேற்றுவாய்.' **நீதி மொழிகள் 16:3**

**10. புத்தக விற்பனை:** தந்தை இக்னேசியஸ் குவான் அவர்களின் "நாங்கள் நினைவில் கொள்கிறோம், நாங்கள் கொண்டாடுகிறோம், நாங்கள் நம்புகிறோம்" என்ற திருப்பலி புத்தகம் உள்ளது. ஒரு புத்தகம் ரிம 65/-

**11. பங்கு சந்தா: <u>உங்கள் கவனத்திற்கு,</u>** 2018ஆம் ஆண்டுக்காக 1283 உறைகள் வினியோகிக்கப்பட்டன. ஜூன் 2018 வரைக்கும் **509 (39.67%)** சந்தாதாரர்கள் மட்டுமே செலுத்திக்கொண்டிருக்கின்றனர். இன்னும் **774 (60.33%)** சந்தாதாரர்கள் செலுத்த தொடங்கவில்லை.

**12. மேற்கு திசை அதிச-வின் காலை சிற்றுண்டி:** மேற்கு திசை அதிச 30 செப் 2018 (ஞாயிறு) காலை 7.00 & 9.00 மணி திருப்பலிகளுக்கு பிறகு விற்பனை செய்யவுள்ளனர். கிடைக்கக்கூடிய பணம் கிறிஸ்து அரசர் சிற்றாலய கட்டிட நிதிக்கு சேரும். மதிய உணவு பொட்டலங்களாகவும் விற்கப்படும். தயவு செய்து உங்களது ஆதரவை தாருங்கள். இந்த வார உணவு பட்டியல் (30 செப் 2018): காலை உணவு - சாம்பார், சட்னியுடன் இட்லி, மாமாக் மீ கோரேங், கொய்த்தியாவ் பிரட்டல், நாசி லெமாக், பலகாரங்கள், சாம்பாருடன் இடியாப்பம், கோதுமை கஞ்சி & காப்பி. மதிய உணவு: கோழி சம்பல், முட்டையுடன் நாசி பிரியாணி, சைவ & ஆட்டு பிரட்டலுடன் நெய்ச் சோறு.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டட நிதி ஆகஸ்டு 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **411,719.40** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **464,282.19** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

23/09/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00 - <u>RM 1,066.50</u> காலை 9.00 - <u>RM 1,525.25</u> மொத்தம்- <u>RM 2,591.75</u>

**2018** - <u>RM 220.00</u> கல்லறை- <u>RM 1,267.85</u>

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்